BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# குறிஞ்சித்தேன் நாவலின் வழி படுகர் இன பாத்திரப்படைப்புகளின் குணநலன்கள்

முனைவர் பா. நளினிப்ரியா

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,அவினாசிலிங்கம்மனையியல்மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர். Email ID: nalinipriya_tam@avinuty.ac.in ORCID No: 0000-0002-7537-9639

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நெடுங்காலமாக வாழ்ந்து வரும் குறிப்பிட்ட இனம் சார்ந்த மக்கள் பழங்குடியினர் என்று அழைக்கப்படுவர். அவ்வின மக்கள் தங்களுக்கென்று உரித்தான மொழிகள், பழக்கவழக்கங்கள், கலாச்சாரம், வாழ்க்கை முறைகள் ஆகியவற்றைக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். அத்தகைய பழங்குடியினர் பட்டியலில் இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பிருந்து நீலகிரிப் பகுதியில் வாழும் மலைவாழ் மக்களின் ஓர் இனம்தான் படுகர் இனம். இவர்கள் படுகு மொழியைப் பேசுபவர்களாக இருந்தனர். இவர்களின் மொழி வெறும் பேச்சு வழக்கில் மட்டுமே உள்ளது. எழுத்துவடிவம் பெறவில்லை. ராஜம் கிருஷ்ணன் எழுதிய குறிஞ்சித்தேன் என்னும் நாவல் நீலகிரியில் வாழும் மலைவாழ் மக்களான படுகர்இன மக்களின் வாழ்வியல் அமைப்பை எடுத்துக்கூறும் வகையில் படைக்கப்பட்ட நாவலாகும். இந்நாவல் 1963 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ஒருவரலாற்றுச் சிறப்புமிக்க நாவலாகும். தமிழில் பழங்குடியினர் பற்றிகளாய்வு செய்து வெளிவந்த நாவல்களில் இந்நாவல் முதல் நாவலாகக் கருதப்படுகிறது. இவ்வாய்வில் ஆசிரியர் நீலகிரிக்கு நேரடியாகச் சென்றே தரவுகளைச் சேகரித்து பதிவிட்டுள்ளார். அங்குள்ள மக்களிடம் இணைந்து வாழ்ந்து அவர்களின் வாழ்வை கூர்ந்து கவனித்து இயற்றிய இந்நாவலை இயற்றியுள்ளார். இந்நாவலின் வழி படுகர் இனமக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், மக்களின் குணாதிசயங்கள், வாழ்வியல் முறைகள் ஆகியன பற்றி எடுத்துரைப்பதே இவ்வாய்வாகும்.

**திறவுச்சொற்கள்**

ஹட்டி - படுகர் ஜோகி – படுகு – கௌடர் - மனப்பக்குவம் - தோடர்.

**முன்னுரை**

சங்க இலக்கியப் பாடலில் குறிப்பிட்டுள்ள 96 வகை மலர்களுள் குறிஞ்சி மலரும் ஒன்று. அக்குறிஞ்சிமலர் மலைப் பகுதியில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும். இம்மலர்களின் பருவங்களைக் காலத்தின் குறியீடாகக் கொண்டு மக்களின் வாழ்க்கையில் உண்டாகும் மாற்றங்களை எடுத்துக்கூறும் வகையில் குறிஞ்சித்தேன் நாவல் அமைந்துள்ளது. இதில் தோடர் மற்றும் பிற பழங்குடியினரின் பெயர்களும் சூழலுக்கேற்ப இடம்பெற்றிருந்தாலும் பெரும்பாலும் படுகர் சமூகத்தினரின் திணைவாழ்க்கை முறையையே மையமிட்டு கதைநகர்கிறது.

**குறிஞ்சித்திணை வாழ்வியல்**




மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சித்திணைக்குரிய நிலப்பகுதியாகும். குறிஞ்சிகாலம் என்பதை 12 ஆண்டுகளுக்கு ஒருமுறைபூக்கும் பூவின் காலத்தை அடிப்படையாகக் கொண்டு 5

குறிஞ்சிக்காலங்கள் அதாவது 60 ஆண்டுகளுக்குண்டான மக்களின் வாழ்க்கையைப் பற்றி இந்நாவல் விவரிக்கின்றது. "குறிஞ்சிநில மக்கள் வேட்டையாடுதலைத் தம் தொழிலாகக் கொண்டிருந்தனர். உணவிற்காகவும், பொழுது போக்கிற்காகவும் வேட்டையாடுதலை மேற்கொண்டனர். குறிஞ்சி நிலத்தவர் நிலத்தைப் பண்படுத்தும் முறை, பயிரிடும் முறை, பயிர்க் கருவிகள் முதலியவற்றை முறையாக அறிந்திருந்தனர்." **(பழந்தமிழர் வாழும் வரலாறும், பக்:122).**

படுகர் இனமக்கள் வசிக்கும் கிராமங்களின் பெயரை ஹட்டி என்று அழைப்பர். நீலகிரிப் பகுதியில் 300க்கும் மேற்பட்ட ஹட்டிகளில் இவ்வின மக்கள் வாழ்கிறார்கள். 'கழிகளை நட்டுப் புல்லால் வேய்ந்த குடில்களில் சவ்வாது மலை மக்கள் வாழ்ந்தார்கள் என்பதை 'அகலுள் ஆங்கண்கழி மிடைந்து இயற்றி புலவேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவீர்' என்ற அடிகளால் அறிலாம்' (பழந்தமிழர் வாழும் வரலாறும், பக்:125).



நீலகிரியில் 300க்கும் மேற்பட்ட ஹட்டிகளில் படுகர் இன மக்கள் வாழ்கின்றனர்.

**கதையின் முக்கிய பாத்திரப்படைப்புகள்**

ஜோகி, ரங்கன், கிருஷ்ணன் ஆகிய கதாபாத்திரங்கள் அடுத்தடுத்த தலைமுறையினராகக் காட்டப்படுகின்றனர். அந்தந்த திணையில் வாழும் மக்களுக்கே உரியத்தான பெயர்களைக் கொண்டு பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளனர். திணைநிலைப் பெயர்களைப் பற்றி தொல்காப்பியரும் எடுத்தியம்பியுள்ளார்.

*“பெயரும் வினையும் என்று ஆயிருவகைய*
*திணைதொறும் மருவிய திணைநிலைப் பெயரே”*
*(தொல்.பொருள்.966)*

மக்களிடையே காணப்படும் உறவுகள், அன்பின் வெளிப்பாடு, கருத்து மோதல்கள், விருப்பு, வெறுப்புகள், பொறாமை மற்றும் வாழ்வியல் சிக்கல்கள் ஆகியன எடுத்துரைக்கப்பட்டுள்ளன. படுகர் இனமக்களின் தனித்துவமான சடங்குகள் மிகஆழமாக வெளிப்படுகிறது.

- ஜோகி என்பவன் பாரம்பரிய முறைகளைக் கடைபிடிக்கும் **முதல் தலைமுறைக்குரியவன்.**
- நஞ்சி குடும்பத்தின் தூணாகவும், அச்சாணியாகவும் விளங்குபவள். ஜோகியின் மனைவி. அளவற்றப் பாசம், சகிப்புத்தன்மைக் கொண்டவள்.
- ரங்கன் **(இரண்டாம்தலைமுறை)** என்பவன் ஜோகிக்கும் நஞ்சிக்கும் பிறந்த மகனாவான். பழைமைக்கும் புதுமைக்கும் இடையே தத்தளிக்கும் மனிதன். தந்தையின் வேலையான விவசாயத்தை மாற்றித் தேயிலைத் தோட்டம் அமைத்து முன்னேறத் துடித்தவன். மனிதர்களின் வணிக சூழ்ச்சியால் கடனாளனாக மாறி மனஉளைச்சலுக்கு ஆளாகி வறுமையில் மரணமடைபவன்.
- லிங்கி என்பவள் ரங்கனின் அக்கா. குடும்ப உறவுகளின் சிக்கல்கள், ஏமாற்றங்கள் மற்றும் படுகர் இனப்பெண்களின் வாழ்வியல் போராட்டங்களைத் தன் வாழ்க்கையின் மூலம் வெளிப்படுத்துபவள்.
- **கிருஷ்ணன் (மூன்றாம்தலைமுறை)** ரங்கனின் மகன். நவீனக்கல்வி கற்ற, நகர, நாகரிக மோகம் கொண்டவன். நவீனமயமான காலங்களின் பின்சென்று பாரம்பரிய சடங்கு, சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்களைக் கைவிட்டவன்.
- கௌடர் என்பவர்கள் சமவெளியிலிருந்து மலைக்கு வந்த வணிகர்கள். இவர்கள் அனைவருமே குறிஞ்சித்தேன் நாவலின் முக்கிய கதாப்பாத்திரங்கள் ஆவர்.



**படுகர் இனமக்களின் குணநலன்கள்**

குறிஞ்சித்தேன் நாவலில் இடம்பெறும் கதாப்பாத்திரங்களின் வழி படுகர் இனமக்களின் பொதுவான குணநலன்கள், மனப்பக்குவம், இயல்புகள் ஆகியன அவர்களின் தனித்துவமான வாழ்க்கை முறையை அடியொற்றியே அமைந்துள்ளன. காலங்களின் பரிணாம வளர்ச்சியால் ஏற்படுகின்ற குணநலமாற்றங்களை ஆசிரியர் மிகஅழகாக படம்பிடித்துக் காட்டியுள்ளார். படுகர்களின் குணநலன்களை கீழ்வருமாறு வகைப்படுத்தியுள்ளார்.

- இயற்கையிலே அமைந்த அமைதியான குணம்.
- ஆரம்பகால படுகமக்கள் தங்கள் வாழ்வின் ஆதாரத்திற்காக விவசாயம் மற்றும் கால்நடைவளர்ப்பில் ஈடுபட்டு பேராசையற்ற குணத்துடன் வாழ்ந்தனரே தவிர செல்வத்தை சேர்க்கும் பேராசைக் குணம் அவர்களிடம் இருந்ததில்லை.
- மலையின் அமைதித்தன்மை போன்றே மக்களும் மென்மையான இதமான, கவலையற்ற குணம் கொண்டவர்களாக இருந்தனர்.
- மக்கள் தங்களின் குடியிருப்பு பகுதிகளில் வாழும் அனைத்து குழந்தைகளையும் தங்களின் சொந்தக் குழந்தைகள் போலவே பாவிக்கும் கூட்டுச்சமுதாய உணர்வுடன் கூடிய பரந்த மனம் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர்.
- மக்களில் யாருக்காவது துன்பம் வரும்போதும், வறுமை நிலையிலும் ஒருவருக்கொருவர் பொருளுதவி செய்து கொண்டும், உழைப்பைப் பகிர்ந்து கொண்டும் தோள்கொடுக்கும் குணம் கொண்டவர்களாக வாழ்ந்தனர்.
- படுகர் இனத்தில் ஆண்களுக்கு இணையான உரிமைகள் பெண்களுக்கு வழங்கப்பட்டது.
- நாவலில் வரும் நஞ்சி என்ற பெண்பாத்திரப்படைப்பின் சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, குடும்பத்தைக்காக்கும் பொறுப்புணர்வு போன்ற நற்குணங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**நாகரிக வளர்ச்சி மாற்றத்தினால் மாறிய பாத்திரங்களின் குணநலன்கள்**

கிழங்கு போன்ற விவசாய உணவுப்பயிர்களை விளைவிப்பதை விட்டுவிட்டு அதிகலாபம் தரும் தேயிலை, காப்பி போன்ற பயிர்களைப் பயிரிட ஆரம்பித்த போது இவர்களின் பாரம்பரிய குணங்களான தூய்மையும் அன்பான குணமும் வீழத் தொடங்கின.

5 தேயிலைத் தோட்டம் – மாற்றத்தின் தொடக்கம்



விவசாயத்திலிருந்து தேயிலைத் தோட்டம் நோக்கி மாற்றம் – பொருளாதார முன்னேற்றம் மற்றும் புதிய சவால்கள்.

வெளியுலக நாகரிகம் மற்றும் பணத்தின் தேவை அதிகரித்தலால் அடுத்தடுத்த தலைமுறைகளிடம் சுயநலம், வஞ்சகக்குணம், பொறாமைக்குணம் ஆகிய குணங்க மேலோங்குவதை இந்நாவல் வெளிக்காட்டுகிறது. இந்நாவலில் முதல்தலைமுறையில் இடம்பெறும் ஜோகி மற்றும் இரண்டாம்தலைமுறையில் இடம்பெறும் ரங்கன் ஆகிய கதாப்பாத்திரங்களின் குணநலன்கள் படுகர் இனத்தின் அடுத்தடுத்த தலைமுறை மாற்றங்களை மிகத் துல்லியமாகக் காட்சிப்படுத்துகின்றன.

**ரங்கனின்குணநலன்கள்**

தந்தையாகிய ஜோகியின் பழைமைவாதத்தை உடைத்தெறிந்து புதுமையினை வணிக முறையைத் தேடிச்சென்றவர். செல்வப் பெருக்கினால் படுகர் இனத்திற்கே உரிய நிதானத்தை இழந்து ஒருவிதமன அழுத்தத்தில் ஆழ்ந்து கோபமும் சுயநலமும் ரங்கனிடம் குடியேறின. இந்த குணநலன்களின் மூலம் படுகர் சமூகத்தின் கலாச்சார வீழ்ச்சியையும் நாகரிக வளர்ச்சியையும் மிகஅழகாக ஆசிரியர் விவரிக்கிறார்.

**கிருஷ்ணனின் குணநலன்கள்**

கல்வியும், செல்வமு;ம் ஒரு மனிதனின் பாரம்பரிய குணங்களை எவ்வாறு அடியோடு மாற்றியமைக்கிறது என்பதை கிருஷ்ணனின் கதாப்பாத்திரம் எடுத்துக்காட்டுகிறது. 'கல்வி என்பது வெறும் அறிவு மட்டும் வளர்ப்பதற்காக அன்றி ஒழுக்கத்தைப் பேணவும் பயன்பட்டதால் செல்வத்தைவிடவுக் கல்விக்கு உயர்வான இடம் கொடுத்திருந்தனர்.'(பழந்தமிழர் வாழும்

வரலாறும், பக்:143) சமவெளி மனிதர்களின் ஆடம்பர வாழ்க்கையையும் பழக்கவழக்கங்களையும் ஏற்றுக் கொண்டதனால் குடும்ப வறுமையைக் கூட பொருட்படுத்தாமல் துணை நிற்காமல் தன் சுயநலத்திற்காக மட்டும் செல்வத்தைத்தேடி ஓடும் கதாபாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளான். மொத்தத்தில்; ஜோகி மண்ணையும் மனிதர்களையும் இயற்கையையும் நேசித்த தூய்மையானவர். ரங்கன் நாகரிக உலகில் பயணித்து மனஉளைச்சலுக்கும் உள்ளப்போராட்டத்திற்கும் ஆளானவன். கிருஷ்ணன் பாரம்பரிய அடையாளத்தை முற்றிலுமாக இழந்தவன்.

**நஞ்சி கதாப்பாத்திரம்**

கணவனை இழந்த பிறகு தன் மகனாலும் கைவிடப்பட்ட நஞ்சி தனித்து வாழும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறாள். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிப்பூவை கண்டு மகிழ ஜோகியும், ரங்கனும் இல்லை. பேரழகுமிக்க இயற்கையோடு இணைந்து வாழ்ந்த சூழலில் நஞ்சி பேரக்குழந்தையைக் கைகளில் ஏந்தியபடி அனாதையாக எதிர்காலத்தில் என்ன செய்யப்போகிறோம் என்ற தவிப்பில் ஆழ்ந்த சூழலில் நிற்பதோடு நாவல் நிறைவடைகிறது.

**தொகுப்புரை**

குறிஞ்சிப்பூவின் தேனைப்போல தூய்மையான உள்ளம் கொண்டவர்கள் படுகர் இனமக்கள். ஆனால் சமவெளியாளர்களின் தொடர்பு, நவீனநாகரிகம், செல்வமோகம் ஆகியவற்றால் தூய்மையான உள்ளத்தில் நஞ்சு கலந்துவிட்ட தன்மையை உணர்த்துகின்றன. பூர்வக்குடி மக்களின் தனித்தும் சிதைந்து அழிந்து வந்ததை ராஜம் கிருஷ்ணன் கவலையோடு சுட்டிக்காட்டியுள்ளார். காடுகளை அழித்து தோட்டங்காளக மாற்றப்பட்டவை நிலவளத்தை சீரழிக்கின்ற சூழலியல் விழிப்புணர்வை இந்நாவல் ஏற்படுத்துகிறது. நவீனகல்வியை எதிர்க்கவில்லை ஆசிரியர். ஆனால் அக்கல்வியே சொந்த மண்ணுடனும், பெற்றோருடனுமான உறவை அறுத்துவிடக்கூடாது என்ற சமூகக்கருத்தை வலியுறுத்திக் கூறுவதை உணரமுடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**


1. இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம் பொருளதிகாரம், நியுசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
2. செம்மூதாய் சதாசிவம், பழந்தமிழர் வாழ்வும் வரலாறும், செம்மூதாய் பதிப்பகம், சென்னை. 2016.
3. தமிழ் இணையக் கல்விக்கழகம், தமிழகப் பழங்குடி மக்கள், சிவகாமி அச்சகம், சிதம்பரம். 1972.
4. ராஜம் கிருஷ்ணன், குறிஞ்சித்தேன், சோழன் பப்ளிகேசன்ஸ், சென்னை. 2013.


*****